**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 142/2018**

Deposition of the witness for Prosecution **PW** 4
Name : **பேச்சியம்மாள்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (20.05.2026)

Accused absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆய்க்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்குமுன்பு ஆய்க்குடி காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்த தர்மலட்சுமி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன் மற்றும் உதவி ஆய்வாளர் சிவநாதன் ஆகியோர்கள் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்கள். அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 17.11.2017 ஆம் தேதி பெண் தலைமை காவலராக பணிபுரிந்த தர்மலட்சுமி என்பவர் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 மநிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன்தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.231/2017, சட்டப்பிரிவுகள் 294(பி),323, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act இன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். பின்னர் வழக்கு கோப்பினை சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 17.11.2017 ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருண்சாமி, ஜேசுராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.**3,** மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**4** ஆகும்.

பின்னர் பட்டியல் சாட்சிகள் அந்தோணி ஜென்சி, கலிஸ்டா பாத்திமா, ஆரோக்கியசாமி, ஜெரால்டு மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் தர்மலட்சுமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்பு இந்த வழக்கினை சட்டப்பிரிவுகள் 294(பி),323, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act லிருந்து 294(பி),352, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ஆக மாறுதல் செய்து தாக்கல் செய்துள்ளார். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். எதிரி முன்பிணையில் சென்றுவிட்டதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இறுதியாக எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சொன்ன மாதிரி, சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்திற்கு பின்யோசனையுடன் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்காக வேண்டி ஒருதலைபட்சமாக விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து பின் யோசனையுடன் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து பிழையான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA — Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.01 14:06:42 +0530

Judicial Magistrate,
Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**

**CC No. 142/2018**

Deposition of the witness for Prosecution **PW** 3
Name : **ஜெரால்டு**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (20.05.2026)

Accused absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

1. நான் அகரக்கட்டில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பவத்தை கேள்விபடவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.
<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. கடந்த 8.11.2017 ம் தேதி காலை 8.45 மணிக்கு அ.சா.1 எங்கள் ஊரில் SKTB அதியமான் மாட்டு தொழுவிற்கு அருகில் நடந்து போகும்போனேன் என்றால் சரியல்ல. அப்போது அங்கு நின்றிருந்த எதிரி செல்போனில் அ.சா.1 யை போட்டோ எடுத்ததுபோல் பாவணை செய்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 எதிரியிடம் யாரை போட்டோ எடுக்கிறாய் என்று கேட்டதற்கு அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. பின்பு எதிரி கையால் அ.சா.1 முதுகில் அடித்து, கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.01 14:06:48 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**

**CC No. 142/2018**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : **கலிஸ்டா பாத்திமா**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (20.05.2026)

Accused absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

1. நான் அகரக்கட்டில் குடியிருந்து வீட்டுவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். எதிரியை தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.
<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. கடந்த 8.11.2017 ம் தேதி காலை 8.45 மணிக்கு அ.சா.1 எங்கள் ஊரில் SKTB அதியமான் மாட்டு தொழுவிற்கு அருகில் நடந்து போகும்போனேன் என்றால் சரியல்ல. அப்போது அங்கு நின்றிருந்த எதிரி செல்போனில் அ.சா.1 யை போட்டோ எடுத்ததுபோல் பாவனை செய்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 எதிரியிடம் யாரை போட்டோ எடுக்கிறாய் என்று கேட்டதற்கு அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. பின்பு எதிரி கையால் அ.சா.1 முதுகில் அடித்து, கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.01 14:06:55 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**

**CC No. 142/2018**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **அந்தோணி ஜென்சி**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (20.05.2026)

Accused absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

1. நான் அகரக்கட்டில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எதிரியை தெரியும். அவர் பக்கத்து வீட்டுக்காரர். தற்போது நானும், எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம். சமாதான மனுவில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.
<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. கடந்த 8.11.2017 ம் தேதி காலை 8.45 மணிக்கு நான் எங்கள் ஊரில் SKTB அதியமான் மாட்டு தொழுவிற்கு அருகில் நடந்து போகும்போனேன் என்றால் சரியல்ல. அப்போது அங்கு நின்றிருந்த எதிரி செல்போனில் என்னை போட்டோ எடுத்ததுபோல் பாவணை செய்தார் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் யாரை போட்டோ எடுக்கிறாய் என்று கேட்டதற்கு அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. பின்பு எதிரி கையால் எனது முதுகில் அடித்து, கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும் இது சம்மந்தமாக காவல்

நிலையம் சென்று புகார் மனு கொடுத்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.06.01 14:07:03 +0530

Judicial Magistrate, Shenkottai